*29*

# பாவத்தின் சுய அழிவுத் தன்மை

## (9:1-11)

*நீண்ட காலத்திற்கு முன்பு பவுல், "பாவத்தின் சம்பளம் மரணம்" என்று அறிவித்தார் (ரோமர் 6:23அ). இருப்பினும் இன்றைய நாட்களில் "பாவம்" என்ற வார்த்தை மக்களில் பலருக்குச் சிறிதளவே அர்த்தம் கொண்டதாக உள்ளது. உலகப் புகழ்பெற்ற மனநோய் மருத்துவரான கார்ல் மென்னின்கெர் என்பவர், "Whatever Happened to Sin?"[1] என்ற தமது புத்தகத்தில், கடந்த ஐந்து அல்லது அதற்குத் சற்றேறக்குறைய உள்ள பத்தாண்டுகளில், மக்கள் அதிகம் தீவிரமான பாவங்கள் என்று கருதுபவை "குற்றங்கள்" அல்லது "சுகவீனங்கள்" என்றாகியுள்ளன, அதே வேளையில் அவர்கள் குறைவான தீவிரம் கொண்டவை என்று கருதுபவைகள் இப்போது "குற்றங்குறைகள்," "ஒழுக்கரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாத நடக்கைகள்," "சமூகத்திற்கு எதிரான மனப்பாங்குகள்," "தவறுகள்," "அனுசரித்துச் செல்ல இயலாமை," அல்லது "மாறுபட்ட வாழ்வு நடை" - அதாவது "பாவம்" என்பதைத் தவிர வேறு எதுவாயினும் என்பவைகளாக - ஆகியுள்ளன என்று உற்றுக் கவனித்துள்ளார்!*

*பாவம் என்பதன் கருத்தானது சாதகமற்ற நிலைக்குள் வீழ்ந்து போயுள்ளது என்றால், பாவம் நிறைந்த நடக்கையானது மகிழ்சியற்ற விளைவுகளைக் கொண்டுவருகிறது என்ற கருத்தை இந்த உலகம் எவ்வளவு அதிகமாகப் புறக்கணித்துள்ளது! மனிதன் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், பாவி தனது கூலியை - குளிர்ந்த, கடினமான மரணம் என்ற நாணயத்தை - பெறுகின்றான் என்பதைத் தேவன் இன்னமும் அறிவிக்கின்றார் (ரோமர் 6:23). அந்த சத்தியமானது வெளிப்படுத்தின விசேஷம் 9ஐத் தவிர வேறு எவ்விடத்திலும் அதிகம் விரிவாக அறிவிக்கப்படவில்லை.*

*நாம் தற்போது, வெளிப்படுத்தின விசேஷம் 8முதல் 11 வரையுள்ள அதிகாரங்களில் உள்ள ஏழு எக்காளங்களைப் பற்றிப் படித்துக் கொண்டிருக்கின்றோம். நமது முந்திய பாடத்தில், முதல் நான்கு எக்காளங்களைப் பற்றி நாம் படித்து முடித்தோம், அதில் பாவம் என்பது இயல்பான உலகில் தனது செயல்விளைவைக் கொண்டுள்ளது என்பதை வலியுறுத்தினோம். இந்தப் பாடத்தில் நாம், ஐந்தாம் எக்காளத்தைப் பற்றிப் படித்து (9:1-11), பாவியின்மீது பாவம் கொண்டுள்ள செயல்விளைவைக்*

*குறிப்பிடுவோம்.*

*"பாவம் எவ்வாறு புண்படுத்துகிறது" என்று தலைப்பிடப்பட்ட ஒரு பிரசங்கத்தில், ஜிம்மி ஆலென் அவர்கள், பாவமானது உடல்ரீதியாகப் புண்படுத்துகிறது, பாவமானது மனரீதியாகப் பாவமானது மனச்சாட்சியைப் புண்படுத்துகிறது, மற்றும் பாவமானது ஆவிக்குரிய வகையில் புண்படுத்துகிறது என்று சுட்டிக்காண்பித்தார்.[2] மற்றவர்கள் இதைப் பின்வருமாறு இட்டுள்ளனர்: பாவமான வெளிப்படையாக, உள்ளாக, மற்றும் நித்தியத்திற்கும் புண்படுத்துகிறது. பாவத்தின் இந்த விளைவுகள் யாவும் நமது வேதவசனப்பகுதியில் - விளக்கியுரைக்கப் பட்டதாகவோ அல்லது மறைமுகமாய் உணர்த்தப்பட்டதாகவோ - காணப்பட முடியும்.*

## *பாடம் (9:4-6, 10)*

*வெளிப்படுத்தின விசேஷம் 9:1-11 பகுதி, "இந்தப் புத்தகத்திலேயே மிகவும் பொருள்விளங்காத மற்றும் பயமுறுத்தும் காட்சிகளில் ஒன்று"[3] என்று அழைக்கப்பட்டுள்ள அதேவேளையில், இவ்வசனப் பகுதியில் உள்ள வெட்டுக்கிளிகள் "இறைவெளிப்பாட்டில் மிகவும் விசித்திரமான உயிரனங்கள்"[4] என்று விவரிக்கப்பட்டுள்ளன.*

*நமது வேதவசனப் பகுதியின் மாயத்தோற்றமான விபரங்கள் பற்றிய கலந்துரையாடலைக் கொண்டு, பக்கங்கள் பலவற்றை நிரப்பக்கூடும்: விழுந்து போயிருந்த நட்சத்திரத்தினால் குறிப்பிடப்பட்டது யார்? பாதாளக்குழி என்றால் என்ன? அபெத்தோன்/அப்பொல்லியோன் என்பது யார்? இவைபோன்ற கேள்விகளுடன் நாம் போராடுவோம், ஆனால் இந்த தரிசனத்தின் முற்றான செயல்வலிவு என்ன என்பதே மிகவும் முக்கியமானதாக உள்ளது என்பதை நாம் மீண்டும் ஒருமுறை வலியுறுத்த வேண்டும். ஜிம் மெக்கைகன் அவர்கள் கூறியபடி, நாம் சித்திரங்களைப் பார்ப்பதற்குப் பதிலாக, தூரிகையின் வீச்சை அடிக்கடி பார்க்கின்றோம்.[5]*

*நாம் நமது படிப்பைத் தொடங்குகையில், முதலில் முழுக்காட்சியையும் சிந்தைக்குக் கொண்டு வாருங்கள். ("பாதாளக்குழியில் இருந்து வந்த வெட்டுக்கிளிகள்" என்ற விளக்க படத்தைக் காணவும்.) 9:1-11ஐ வாசியுங்கள், மறுபடியும் வாசியுங்கள். நீங்கள் அவ்வாறு செய்கையில், பின்வரும் திறவுகோல் சிந்தனைகளைக் கண்ணோக்குங்கள்: பூமியின் அடிப்பகுதியில் இருந்து பயங்கரமான உயிரினங்கள் வருகின்றன; மனிதர்களை வதைத்தல் என்பதே அவற்றின் நோக்கமாக உள்ளது (வசனங்கள் 4-6, 10). அவைகள் தேவனுக்கு உண்மையானவர்களை அல்ல, ஆனுல் அவிசுவாசிகளையே துன்புறுத்தின (வசனம் 4). இது கடைசி நியாயத்தீர்ப்பு அல்ல: இந்த வாதையானது குறிப்பிட்ட ஒரு காலம் வரைதான் உள்ளது (வசனங்கள் 5, 10) மற்றும் இது மரணத்தை விளைவிப்பதில்லை (வசனங்கள் 5, 6). இந்த சித்தரிப்பு நேரடியான அர்த்தம் கொண்டதல்ல: உண்மையான வெட்டுக்கிளிகள் தாவரங்களைச் சேதப்படுத்துகின்றன, ஆனால் மனக்கிலி ஏற்படுத்தும் இந்த உயிரினங்கள் அவ்வாறு செய்வதில்லை (வசனம் 4).*

இவ்வசனப் பகுதியின் மையச் செய்தி என்ன? இவ்வசனங்கள், முகம்மதுவின் சேனைகளுடைய அழிக்கும் வேலைகளையோ[6] அல்லது நரம்பைப் பாதிக்கும் வாயுவைக் கொண்ட கோபரா ஹெலிகாப்டர்களினால் ஏற்படுத்தப்பட்ட தாக்குதல்களையோ சித்தரிப்பதில்லை.[7] முதலாவது, இப்படிப்பட்ட விளக்கங்கள் முதல் நூற்றாண்டு வாசகர்களுக்கு எந்த அர்த்தத்தையும் கொண்டிருக்காது. இரண்டாவது, முகம்மதுவின் சேனைகளும், கோபரா ஹெலிகாப்டர்களும் மக்களைக் கொன்றன - ஆனால் இந்த வெட்டுக்கிளிகள் அவ்வாறு செய்யவில்லை.

வெட்டுக்கிளிகள் ஏதோ ஒருவகையில், *பாவத்தின் வாதிக்கும் இயல்பைச் சித்தரிக்கின்றன* என்று பெரும்பான்மையான எழுத்தாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர்:

> ... நமக்கு முன்பாக மனிதர்களின் ஆத்துமாக்களுக்கு வாதையைக் கொண்டு வருகிற, ஒழுக்கரீதியான மற்றும் ஆவிக்குரிய சிதைவின் சித்தரிப்பைக் கொண்டுள்ளோம் ... .
>
> தேவனுடைய சட்டத்திற்குக் கீழ்ப்படியாமை என்பது பாவமாக உள்ளது, இது வஞ்சனை மற்றும் மனரீதியான அல்லது ஆவிக்குரிய வாதையுடன் இணைந்துள்ளது ... .[8]

> இது மனித ஆவிக்கும் மனித ஆளுகைத் தன்மைக்கும், பொல்லாங்கு கொண்டுவருகிற வாதையைச் சித்தரிக்கிறது ... . மனிதர்கள் தங்களின் இச்சைகளை, தங்களின் பேராசையை மற்றும் மகிமைக்கான விருப்பத்தைத் திரும்பத் திரும்பப் பின்பற்றுகின்றபோது, மற்றும் தேவனையும் அவரது வழியையும் அவர்கள் கைவிடுகின்றபோது, அவர்கள் ... இந்த ... வாதைகளை அனுபவித்தனர் ... .[9]

> இது தேவனுக்கு எதிராகக் கலகம் செய்வதைத் தேர்ந்து கொண்டவர்களின் வாழ்வில் உள்ள பாவத்தின் அழிக்கும் வாதையின் உண்மை நிலைபற்றிய தரிசனமாக உள்ளது.[10]

யோவானின் வாசகர்கள், தங்களைத் துன்புறுத்திக்கொண்டிருந்த ரோம அதிகாரிகளுக்கு இதை நடைமுறைப்படுத்தி இருக்கலாம் - வெளிப்படுத்தின விசேஷம் 9:1-11 எழுதப்பட்டபோது, ரோமப்பேரரசில் இருந்த அவிசுவாசிகள், பரிசுத்த ஆவியானவர் கொண்டிருந்த பாவிகளின் பட்டியலில் முதலிடத்தில் இருந்திருப்பார்கள் என்று நான் நிச்சயமாய் நம்புகின்றேன். ரே சம்மர்ஸ் அவர்கள், வெட்டுக்கிளிகளின் வாதையென்பது "ரோமப்பேரரசின் நரகத்துவமான அழுகியதன்மையை, அதனுடைய உள்ளான சிதைவை அடையாளப்படுத்துகிறது" என்று கருத்துத் தெரிவித்தார்.[11]

இருப்பினும் நாம் இதன் நடைமுறைப் பயன்பாட்டை யோவானின் நாட்களுடன் சுருக்கிக் கொள்ளவேண்டியதில்லை. முதல் நூற்றூண்டாக இருப்பினும் இருபத்தியோராம் நூற்றூண்டாக இருப்பினும், பாவம் பற்றிய

*உள்கட்டமைப்பான சுய அழிவுத்தன்மை ஒன்றுள்ளது. ஓவன் கிரவுச் அவர்கள், ‘‘பாவம் என்பது தனது சொந்த வேதனை நிறைந்த தண்டனையைக் கொண்டு வருதல் என்பது அதன் இயல்பாகவே உள்ளது’’ என்று குறிப்பிட்டார்.*[12] G. B. கேயர்டு *அவர்கள், தேவன் “பொல்லாங்கைப் பொல்லாங்கின் சுயமான அழிவுக்கு அனுமதிக்கின்றார் ... . பொல்லாங்கு என்பது சுய அழிவுத் தன்மையைத் தனது இயல்பிலேயே கொண்டுள்ளது’’ என்று குறிப்பிட்டார்.*[13]

*நாம் இவ்வசனப்பகுதியை அடையாளத்திற்குப் பின் அடையாளமாகக் கலந்துரையாடுகையில், மேற்கூறப்பட்ட சிந்தனைகளைச் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள். தூரிகையின் வீச்சுக்குறிகளை நாம் பரிசோதனை செய்கையில் சித்தரிப்பின் கண்ணோக்கை இழந்துவிடாதிருங்கள்.*

## *வெட்டுக்கிளிகள் (9:1-11)*

### *இருள் வெளியேற்றப்பட்டது (வசனங்கள் 1-3அ)*

*“ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான், அப்பொழுது வானத்திலிருந்து பூமியின்மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன்’’ (வசனம் 1அ). முந்திய அதிகாரத்தில், வானத்தில் இருந்து விழுந்த நட்சத்திரம் என்பது (8:10) அனேகமாக உருகிய ஒரு கனத்த பொருளாக மாத்திரம் இருந்திருக்கலாம்; ஆனால் 9:1ல் உள்ள நட்சத்திரம் என்பது ஒரு நபர் என்பது தெளிவு, ஏனெனில் ஒரு திறவுகோல் “அவனுக்குத் தரப்பட்டது’’ என்று வசனம் 1ஆ கூறுகிறது. வெளிப்படுத்தின விசேஷத்தின் முதல் தரிசனத்தில், யோவானிடம் இயேசு, தம் கரத்தில் இருந்த ஏழு நட்சத்திரங்கள் ‘‘ஏழு சபைகளின் தூதர்கள்’’ என்று கூறினார் (1:20). அதிகாரம் 9ல் உள்ள நட்சத்திரத்தையும் நாம் அநேகமாக ஒரு தூதன் என்றே நினைக்கலாம்.*

*இந்த நட்சத்திரம்/தூதன் என்பது*[வன்] *வசனம் 11ல் உள்ள “பாதாளத்தின் தூதன்’’ என்பவனாகவே இருக்கின்றானா?*[14] *ஒருவேளை அப்படியிருக்கலாம்; ஒருவேளை அப்படியிராதிருக்கலாம். தனிப்பட்ட வகையில் நான், வசனம் 1ல் உள்ள நட்சத்திரம்/தூதனுக்கும், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் விசேஷித்த பணிப்பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்த மற்ற தூதர்களுக்கும் இடையில் வேறுபாடு எதையும் காணவில்லை. இந்த தூதனுக்குத் திறவுகோல் ‘‘கொடுக்கப்பட்டது’’ என்பதால், இவன் துன்மார்க்கத்திற்கு ஒரு முகவராய் இருக்க வேண்டும் என்று சிலர் வலியுறுத்துகின்றனர்; ஆனால் அதிகாரம் 8ல் தூப பீடத்தினருகில் இருந்த தூதனுக்கு தூபவர்க்கம் “கொடுக்கப்பட்டது’’ (வசனம் 3), மற்றும் அந்த தூதன் தேவனுடைய ஊழியக்காரராயிருந்தார் என்று விளக்கவுரையாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.*

*“ஆனால் இவன் விழுந்துபோன தூதனாயிருந்தான், எனவே இவன் சாத்தானாகவோ அல்லது அவனது தூதர்களில் ஒருவனாகவோ இருந்திருக்க வேண்டும்’’ என்று சிலர் மறுத்துரைக்கின்றனர்.*[15] *இருப்பினும், இவன்*

"விழுந்துபோன தூதன்" என்று இவ்வசனப்பகுதி கூறுவதில்லை. விழுகின்ற நட்சத்திரம் என்பதே இவ்விடத்தில் உருவகமாக உள்ளது. அது, பூமியை வந்தடையும் நட்சத்திரங்களைக் குறிப்பிடுவதற்கு வெளிப்படுத்தின விசேஷம் பயன்படுத்திய வழக்கமான வழிமுறையாகவே உள்ளது (6:13; 8:10). வெளிப்படுத்தின விசேஷம் 9:1ஐ நாம் வாசிக்கும்போது அனேகமாக, ஆகாயத்தில் இருந்து சுழன்று விழும் பற்றியெரிகிற வடிவம் ஒன்றைப் பற்றி மாத்திரம் நினைக்க வேண்டும். அதன் பிரகாசிப்பு மங்கியபோது, பூமியின்மீது ஒரு தூதன் நிற்பதாக காணப்பட்டது.

''அவனுக்குப் பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது'' (வசனம் 1ஆ). என்ன ஒரு வண்ணமிகுந்த சொற்றொடர்: "பாதாளக்குழி"![16] இவ்வார்த்தைகள், எஞ்சிய வசனப்பகுதியுடன் பூரணமாய்ப் பொருந்துவதற்கான வினோதமான மறைபொருளின் காற்றைக் கொண்டுள்ளன. ஆகையால், ''பாதாளக்குழி'' என்ற சொற்றொடர் மூலவசனத்தில் இல்லை என்பதைக் குறிப்பிடுவது என்னை வேதனைப் படுத்துகிறது. கிரேக்க வசனத்தில் "the shaft of the abyss" ("பாதாளத்தின் முனைத்தடி") என்ற நேரடி அர்த்தம் தொனிக்கும் சொற்றொடர் உள்ளது. நிலத்தடியில் உள்ள குகையின் உருவகம் ''பாதாளம்'' என்று அழைக்கப்பட்டது, மேற்பரப்பை அடைவதற்கு அதில் ஒரு (நீண்ட) தடி செருகப்பட்டிருக்கும். அந்தத் தடியின் மேல்பகுதியானது மூடப்பட்டு பூட்டப்பட்டுள்ளது, பாதாளக்குழியில் இருப்பவைகளை விடுவிக்கும்படி அதைத் திறப்பதற்குரிய திறவுகோலானது நட்சத்திரத்திற்கு/தூதனுக்கு தரப்படுகிறது.

"Abyss" என்பது *abusso* (இதில் உள்ள "u" என்பது "y" என்பதாக எழுதப்பட முடியும்) என்ற கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது. "Abyss" என்பது கடலின் ஆழங்களை அல்லது பூமியின் ஆழங்களைக் குறிப்பதற்குக் கிரேக்கப் பழைய ஏற்பாட்டில் (செப்துவஜிந்த் வேதாகமம்) முதன்மையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (ஏசாயா 51:10; ஆதியாகமம் 49:25ஐக் காணவும்).[17] புதிய ஏற்பாட்டில், காணப்படாத உலகத்தைப் பற்றிப் பேசுவதற்குப் பவுல் abyss என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார் (ரோமர் 10:7[18]). லூக்கா 8:31ல் "abyss" என்ற வார்த்தையானது, பொல்லாத ஆவிகள் நியாயத்தீர்ப்புக்கு காத்திருப்பதற்காக அடைத்து வைக்கப்பட்டுள்ள காணப்படாத உலகத்தின் குறிப்பிட்ட இடத்தைக் குறிப்பிடுகிறது (லூக்கா 16:22, 23; 2 பேதுரு 2:4ஐக் காணவும்). (தமிழ் வேதாகமத்தில் மேற்கண்ட வசனப்பகுதிகள் யாவற்றிலும், "abyss" என்பது ''பாதாளம்'' என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது) வெளிப்படுத்தின விசேஷத்தில் "abyss" ("பாதாளம்") என்ற வார்த்தை பிந்திய கருத்தில் பயன்படுத்தப்பட்டது என்பது உறுதி: கடலில் இருந்து எழுந்து வந்த மிருகம் (13:1) "பாதாளத்தில் இருந்து வெளியே வருகிற மிருகம்" என்பதாக அடையாளப்படுத்தப்படுகிறது (11:7; 17:8ஐக் காணவும்). ஆயிரம் ஆண்டுகளுக்கு அடைத்து வைக்கப்பட்டிருந்த பெரிய சிவப்பான வலுசர்ப்பத்தை நாம் காணும்போது, அது பாதாளத்தில் இருக்கும் (20:1-3).

*பாதாளக்குழி என்பது "பிசாசுக்காவும் அவன் தூதர்களுக்காவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினி" (மத்தேயு 25:41) அல்ல என்பதை வலியுறுத்துவதற்கு என்னை அனுமதியுங்கள். அது "அக்கினியும் கந்தகமுமான கடல்" அல்ல (வெளிப்படுத்தின விசேஷம் 20:10; 20:14, 15; 21:8ஐக் காணவும்). அது துன்மார்க்கர் நித்தியத்திற்கும் வசிக்கப்போகும் இடமல்ல.*

*வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் பாதாளத்திற்கான குறிப்புகள், கீழ்ப்படியாமையுள்ள ஆவிகள் பூமிக்குள் ஏதோ ஒரு இடத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றோ அல்லது அசுத்த ஆவிகள் காணப்படாத உலகத்தில் இருந்து வரவும் போகவும் அனுமதிக்கப்படுகின்றனர் என்றோ அர்த்தப்படுவதில்லை என்பதையும் நான் வலியுறுத்தியாக வேண்டும். இது ஒரு அடையாளத்துவத்துவமாக உள்ளது. பாவத்தின் பயங்கரமான இயல்பையும், தொலைதூரத்திற்குச் சென்றுசேரக்கூடிய அதன் செயல் விளைவுகளையும் தெரிவிப்பதற்கு, மனக்கிலியை ஏற்படுத்தும் உயிரினங்கள் கூட்டமாய் மொய்க்கிற கீழ் உலகின் குகையைக் காட்சிக்குள்ளாக்கும்படி-அதன் பின்பு, அந்த உயிரினங்கள் உலகத்தின்மீது கட்டவிழ்த்துவிடப் பட்டால் என்னவாகும் என்பதைக் கற்பனை செய்யும்படி - ஆவியானவர் நமக்கு அறைகூவல் விடுக்கின்றார்.*

*நாம் நமது வேதவசனப் பகுதிக்குத் திரும்பி, தூதன் "பாதாளக்குழியைத் திறந்தான், உடனே பெருஞ்சூளையின் புகையைப்போல அந்தக் குழியிலிருந்து புகை எழும்பிற்று, அந்தக் குழியின் புகையினால் சூரியனும் ஆகாயமும் அந்தகாரப்பட்டது" என்று வாசிக்கின்றோம் (வசனம் 2).*

*ஏழு கலசங்களை முன்னதாகக் கண்ணோக்கி, ஐந்தாம் கலசம் ஊற்றப்பட்டபோது மிருகத்தின் இராஜ்யம் "இருளடைந்தது" (16:10). இருள் என்பது ஐந்தாம் எக்காளத்திற்கும் ஐந்தாம் கலசத்திற்கும் இடையில் உள்ள பொது இணைப்பு நூலாக உள்ளது - இது, இருளானது வெறும் நாடகத்துவச் செயல் வலிவுக்கும் அப்பால் தனிக்குறிப்பைக் கொண்டுள்ளது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது, புகையானது பாவத்தினால் உண்டாக்கப்பட்ட இருதயத்தின் இருளான தன்மையை அடையாளப்படுத்துகிறது என்று விளக்கவுரையாளர்கள் பரவலாக ஒப்புக்கொள்கின்றனர் (2 கொரிந்தியர் 4:4; கொலோசெயர் 1:13ஐக் காணவும்):*

> *இது வஞ்சகம் மற்றும் மாயத்தோற்றம் ஆகியவற்றின் புகையாக, பாவம் மற்றும் வருத்தம் ஆகியவற்றின் புகையாக, ஒழுக்கரீதியான இருள்தன்மை மற்றும் மாயத்தோற்றம் ஆகியவற்றின் புகையாக உள்ளது, ...[19]*

> *... மனிதர்களின் புரிந்து கொள்ளுதல்களை இருளாக்குகிற பிசாசின் தீமையான செல்வாக்கு என்பதாக இந்தப் புகையைக் கருதுதல் என்பது ஒருவேளை மிகச்சிறந்ததாயிருக்கலாம்.[20]*

*பாதாளக்குழியானது இருண்ட புகையின் மேகங்களைக் கக்குகிற*

போது, அந்த இருளில் இருந்து என்ன வெளியேறும் என்று நாம் வியப்படைகின்றோம். ''அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டுப் பூமியின்மேல் வந்தது'' (வசனம் 3அ). வெட்டுக்கிளிகள்? வசந்தகாலத்தில் புல்வெளிகளின்மேல் தத்தித் திரியும் சின்னஞ்சிறு பச்சைநிறமான உயிரினங்களாக நாம் காண்கிறவைகள்? பண்ணையில் உள்ள பையன்கள் மீன்களைப் பிடிப்பதற்குத் தங்கள் தூண்டிலில் இரைவைக்கப் பயன்படுத்தும் பூச்சி? உலகில் நான் வாழும் பகுதியில் உள்ள யாரேனும் ஒருவர், "என்ன ஒரு சிறுமை!" என்று கூறுவதற்குச் சாயக்கூடும். இருப்பினும், பழங்காலத்திய உலகில், "வெட்டுக்கிளிகள் வருகின்றன!" என்பதைக் காட்டிலும் அதிகம் அதிர்ச்சியூட்டக்கூடிய அறிவிப்பு வேறு எதுவும் இல்லாதிருந்தது.[21]

இந்த வெட்டுக்கிளிகள், நான் வளர்ந்த இடத்தில் நாங்கள் வெட்டுக்கிளிகள் என்று அழைத்த உயிரினங்களைப் போல் இருக்கவில்லை: அவைகள் [நான் வாழ்ந்த இடத்தில் உள்ளவைகள்] பச்சைநிறம் உடைய சிறுபூச்சிகளாக உள்ளன, அவைகள் ஆஸ்திரேலியாவில் "cicadas" என்று அறியப்பட்டுள்ளன. மாறாக, வெளிப்படுத்தின விசேஷம் 9ன் வெட்டுக்கிளிகள். நான் பையனாக இருந்தபோது பிடித்த ஒரு வெட்டுக்கிளியை போன்றதாக இருந்தன - நான் பிடித்த வெட்டுக்கிளிக்கு நீண்ட உணர்வு உறுப்பு இருந்தது, ஆனுல் இந்த வெட்டுக்கிளிகளுக்கு குட்டையான உணர்வு உறுப்பு இருந்தது என்ற விதிவிலக்கு உள்ளது.

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குட்டையான உணர்வு உறுப்புக் கொண்ட வெட்டுக்கிளிகள்/பெரிய வெட்டுக்கிளிகள் என்பவை பாலைவனத்தில் வளர்கின்றன, மற்றும் இவைகள் குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில், உணவைத் தேடி பசுமையான, பயிர்செய்யப்பட்ட நிலங்களை நோக்கிப் படையெடுத்து வரும். இவைகள் நூறடி அகலம் கொண்ட மற்றும் நான்கு மைல்கள் நீளம் கொண்ட பெரிய தூண் போன்ற வடிவில் கூட்டமாகப் பயணிக்கும். இவைகள் சூரியனின் வெளிச்சத்தையே மறைக்குமளவுக்கு மிகவும் அடர்த்தியாக ஆகாயத்தில் பறந்தன. இவைகள் பூமியில் அமர்ந்தபோது, தத்திச்செல்லும் போர்வையைப்போல் பூமியை மூடி, இவற்றின் வழியில் உள்ள எல்லாத் தாவரங்களையும் பட்சித்தன. இவைகள் மரங்களில் இருந்து பட்டைகளை உண்டன, நிலங்களில் இருந்த பயிர்களை உண்டன, துணிகளையும் கயிறுகளையும்கூட உண்டன. இவைகளின் பசி தணியக் கூடாததாக இருந்தது. இவைகள் தாக்கிய எந்த ஒரு நாடும், விரைவிலேயே தன்னிடம் உள்ள பச்சையான தாவரங்கள் ஒவ்வொன்றும் உரியப்பட்ட நிலைக்கு ஆளாயிற்று.[22]

எகிப்து நாட்டின்மீது வந்து சேர்ந்திருந்த எட்டாவது வாதை நமக்கு நினைவுக்கு வருகிறது (யாத்திராகமம் 10:15). இருப்பினும் வெளிப்படுத்தின விசேஷம் 9க்கு மிகவும் நெருக்கமாக உறவுபட்டுள்ள வேதாகமக்குறிப்பு யோவேல் 1; 2 அதிகாரங்களில் உள்ளது.

**மரணம் விரும்பப்பட்டது (வசனங்கள் 3ஆ-6, 10)**

வேதாகம காலங்களில் இயல்பான வெட்டுக்கிளிகள் பயங்கரத்திற்கு

*உரியவைகளாய் இருந்தது போலவே, வெளிப்படுத்தின விசேஷம் 9ல் உள்ள வெட்டுக்கிளிகளும் அதிகம் பயங்கரத்திற்கு உரியவைகளாய் இருந்தன. "அவைகளுக்குப் பூமியிலுள்ள தேள்களின் வல்லமைக்கொப்பான வல்லமை கொடுக்கப்பட்டது" (வசனம் 3ஆ). அவைகள் "தேள்களின் வால்களுக்கு ஒப்பான வால்களையும் ... கொடுக்குகளையும்" கொண்டிருந்தன என்று வசனம் 10அ விவரிக்கிறது.*

*வெட்டுக்கிளிகள் தங்களின் எண்ணிக்கையினுல் பயத்தை உண்டாக்கின, ஆனுல் தனித்தனியான வகையில் அவைகள் துன்பம் இழைக்காதவைகளாய் இருந்தன. நான் எனது வெறுங்கைகளினால் வெட்டுக்கிளிகளைப் பிடித்துள்ளேன். அவைகள் எனது கைமுட்டிக்குள் துவையும்போது, குத்துவதுபோல் உணர்வு ஏற்படும், அவைகள் சிலவேளைகளில் எனது தோலைக் கிள்ளும், ஆனுல் அவைகளால் உண்மையான சேதத்தை விளைவிக்க முடியாது. தீங்கற்ற இந்த உயிரினங்களுக்குப் பதிலாக, நீண்ட, கடுமையாகத் தாக்குகிற, நுனியில் விஷம்கொண்ட தேளின் வால்கொண்ட ஒரு பூச்சியைக் கற்பனை செய்து பாருங்கள்! அப்படிப்பட்ட வெட்டுக்கிளிகளிடம் இருந்து நான் சற்றுத் தூரம் தள்ளியே இருப்பேன்!*

*இவைகள் சாதாரண வெட்டுக்கிளிகள் அல்ல என்பது தெளிவு: "பூமியின் புல்லையும் பசுமையான எந்தப் பூண்டையும் எந்த மரத்தையும் சேதப்படுத்தாமல் ... அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது" (வசனம் 4)*[23] *தாவரங்கள் என்பவை வெட்டுக்கிளிகளுக்கு நிலையான புகுந்து விளையாடும் இடமாய் இருந்தன, ஆனுல் அவற்றின் உணவு அட்டவணையில் இருந்து பசுந்தாவரங்களைக் கர்த்தர் நீக்கிப்போட்டார். அதற்குப்பதிலாக மனிதர்களைக் குறிவைக்கும்படி அவைகளுக்குக் கூறப்பட்டது! அவைகள் எந்த மனிதர் மீதாவது இறங்கிவிடக்கூடாது; அவைகள், "தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரைமாத்திரம் சேதப்படுத்த" வேண்டியவைகளாய் இருந்தன (வசனம் 4ஆ).*

*அதிகாரம் 7ல் 144,000 பேர் முத்திரையிடப்பட்டதைப் பற்றி நாம் படித்தபோது, முத்திரையிடப்பட்டவர்களைப் பாதுகாத்தல் என்பதே முத்திரையிடுதலின் முதன்மை நோக்கமாய் இருந்தது என்று நாம் கற்றறிந்தோம். நமது தற்போதைய வசனப்பகுதி, தேவனுடைய மக்கள் மகிழ்வுடன் அனுபவிக்கின்ற பாதுகாப்பிற்கு உதாரணம் ஒன்றைத் தருகிறது. வெட்டுக்கிளிகள் என்பவை, கீழ்ப்படியாமையின் விளேவுகளைக் குறிப்பதால், கீழ்ப்படிபவர்கள் அந்த விளைவுகளில் இருந்து தப்புவிக்கப்படுகின்றனர்.*

*முத்திரையிடப்படாதவர்கள் மீது செயல்படுத்தப்பட வேண்டிய "துன்பத்தின்" அளவானது, பின்தொடரும் வசனங்களில் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. வசனம் 5ன் முதல் பகுதியில், வெட்டுக்கிளிகள் "அவர்களேக் கொலைசெய்யும்படிக்கு அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்படாமல், ஐந்துமாதமளவும் அவர்களை வேதனைப்படுத்தும்படிக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது" என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது (வசனம் 5அ; வசனம்*

10ஐக் காணவும்). பிற்பாடு, மனிதகுலத்தின் ஒரு பகுதி கொல்லப்படும் (9:20ஐக் காணவும்); ஆனால் ஐந்தாம் எக்காளத்தின் காலத்தின்போது, தேவபக்தியற்றவர்கள் கொல்லப்படவில்லை. மாறாக அவர்கள் ஐந்து மாதமளவும் வாதிக்கப்பட்டனர்.

முந்திய பாடம் ஒன்றில் நாம், "ஐந்து" என்ற எண் "வரையறைக் குட்பட்ட சக்தி அல்லது காலம்" என்பதை மறைமுகமாய் உணர்த்திற்று என்று கூறினோம். ஐந்து மாதங்கள் என்பது வெட்டுக்கிளிகளில் சில வகைகளில் வாழ்வுச் சுழற்சிக்காலமாயிருந்தது என்றும் வெட்டுக்கிளிகளால் ஏற்படும் சேதங்கள் சாதாரணமாக, ஒவ்வொரு ஆண்டிலும் ஐந்து மாத கால அளவுக்கே ஏற்பட்டன என்றும் சில எழுத்தாளர்கள் சுட்டிக்காண்பிக் கின்றனர். இவ்வசனப்பகுதியில் "ஐந்துமாதமளவும்" என்ற சொற்றொட ரானது அனேகமாக, வெட்டுக்கிளிகளின் செயல்பாட்டைத் தேவன் மட்டுப்படுத்தியிருந்தார் என்ற உண்மையை மறுவலிவூட்டுவதாக மாத்திரம் இருக்கலாம் - இது, அவர் அவ்வாறு செய்யாதிருந்தால், கிறிஸ்தவரல்லாத ஒவ்வொருவரும் அழிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது.[24]

வசனம் 5ன் கடைசிப் பகுதியில், வெட்டுக்கிளிகளின் வாதையானது, "தேளானது மனுஷரைக் கொட்டும்போது உண்டாகும் வேதனையைப் போலிருக்கும்" என்று கூறப்படும் சிந்தனைக்கு நாம் திரும்புகின்றோம். ("தேளானது கொட்டும்போது உண்டாகும் வேதனையைப்போலிருக்கும்" என்ற விளக்க படத்தைக் காணவும்.) தேள் என்பது பழங்கால உலகத்தில் கடுமை வாய்ந்தவற்றில் ஒன்றாக இருந்தது (உபாகமம் 8:15; 1 இராஜாக்கள் 12:11; எசேக்கியேல் 2:6; லூக்கா 10:19; 11:12 ஆகியவற்றைக் காணவும்).

தேள் என்ற உயிரினமானது, பாறைகளின் அடியிலும் பாறை இடுக்குகளிலும் ஒளிந்து கொள்கின்றது. அது தனது ஒளிப்பிடத்தில் இருந்து வேகமாக வெளியேறி, பலியாக இருக்கும் உயிரினத்தைக் தனது இடுக்கியினால்அசைவற்றுப் போகச்செய்கிறது. அதன்பின்பு, கொட்டும் கொடுக்கை முனையாகக் கொண்ட அதன் வாலானது முன்னோக்கிச் சீறிவந்து, அதனிடத்தில் சிறைப்பட்ட உயிரினத்திற்குள் விஷத்தைப் பாய்ச்சுகிறது. சிறு உயிரினங்கள் இவ்விஷத்தினால் கொல்லப்படுகின்றன அல்லது முடக்கப்படுகின்றன. இந்தக்கொட்டுதலினால் மனிதர்கள் சாவுக்கேதுவாகுதல் என்பது அரிதானதாகவே உள்ளது,[25] ஆனால் அது மிகவும் வேதனை நிறைந்ததாக இருக்கிறது.

வேதாகம நிகழ்ச்சிகள் நடைபெற்ற நாடுகளில் இருந்த பெரிய அளவிலான தேள்களை நான் ஒருக்காலும் கண்டிருப்பதில்லை, ஆனால் ஒருமுறை நான் ஓக்லஹாமாவின் தேள் ஒன்றை நெருக்கமாய் எதிர் கொண்டேன். நான் உயர்நிலைப் பள்ளியில் பயின்று முடித்த உடன் ஒரு பால்பண்ணை விவசாயினிடத்தில் வேலை செய்தேன். அவர் கூலிக்கு அமர்த்தியிருந்த உதவியாளர்களுக்கான வீட்டில் நான் தங்கியிருந்தேன். அந்த வீடு சற்றுக்காலம் குடியில்லாது இருந்தது, ஊரும் உயிரினங்கள் பல அந்த வீட்டினுள் அலைந்து திரிந்து கொண்டிருந்தன. ஒருநாள் காலையில், பால்கறப்பதில் உதவி செய்வதற்காகச் சூரிய உதயத்திற்கு முன்பு நான்

*படுக்கையை விட்டு எழுந்தேன் - அப்போது ஒரு தேளை மிதித்துவிட்டேன். ஆம், அதன் கொட்டுதல் என்பது வேதனை நிறைந்ததாக உள்ளது. எனவே அடுத்த வசனத்தின் உணர்வை நான் ஓரளவுக்கு மதித்து உணர முடிகிறது: "அந்நாட்களில் மனுஷர்கள் சாவைத்தேடியும் அதைக் காணாதிருப்பார்கள், சாகவேண்டுமென்று ஆசைப்படுவார்கள், சாவோ அவர்களுக்கு விலகி ஓடிப்போம்" (வசனம் 6).*[26]

*இந்தத் தனிநபர்கள் சாவைக் காணமுடியாது இருந்தது ஏன், அவர்கள் தற்கொலை செய்துகொள்ளாது இருந்தது ஏன், என்று விளக்கவுரையாளர்கள் திகைப்படைகின்றனர். இது உயர்வு நவிற்சியணியாக, உருவக மொழிநடையாக உள்ளது. இதை நேரடி அர்த்தமாகப் பொருள்கொள்ளக்கூடாது என்பதைச் சிந்தையில் காத்துக்கொள்ளுங்கள். அவ்வப்போது நம்மில் பலர் மரணம் என்பது ஒரு விடுதலையாக/நிம்மதியாக இருக்கும் என்று நினைக்கும் அளவுக்கு மிகவும் வியாதிப்பட்டு இருந்திருக்கலாம்; இருப்பினும் நாம் மரணம் அடைந்து விடவில்லை, ஆனால் அந்த வேதனையினூடே நாம் கடந்து வரவேண்டியிருந்தது. வசனம் 6 அதைத்தான் கூறுகிறது. தேவபக்தி யற்றவர்கள் தங்கள் மனந்திரும்பாத/மனம்வருந்தாத நிலையில் நிலைத்திருக்கும் வரையிலும் மனநிம்மதியைக் காண இயலாதிருந்தது.*[27]

*இந்த வாழ்வில், பாவி எவ்வித மாறுபாடுமின்றி தமது வேதனையைக் கொண்டுள்ளார் - மனம் வருந்தித் தேவனிடத்தில் திரும்புதல் என்பதைத் தவிர, வேறு வகையில் விடுதலையை/நிம்மதியைக் காண இயலாத வேதனையைக் கொண்டுள்ளார் - என்பதே வசனம் 6ன் முதன்மை வலியுறுத்தமாக உள்ளது. சிலருக்கு இது, மனச்சாட்சியில் ஒரு மனவேதனையை உள்ளடக்குகிறது. குற்றமுள்ள மனச்சாட்சியின் பெருந்துன்பம், பவுலினால் ரோமர் 7ல் விளக்கியுரைக்கப்படுகிறது: அவர், ''என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக் கிறதில்லை" என்று கூறியபின்பு, அவர் தம்மைப் பாவத்திற்கு "கைதி" என்று அறிவித்தார், மற்றும் கடைசியில் "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" என்று கதறினார் (ரோமர் 7:17-24).*[28]

*ஓவன் கிரவுச் அவர்கள், "குற்றத்தின் கனம், மனச்சாட்சியின் வாதை, நினைவுபடுத்தப்பட்ட பொய்களின் பெருந்துன்பம், விபசாரத்துவக் காட்டிக்கொடுத்தல் என்ற இரத்தம் சிந்தும் பழைய புண்ணுள்ள தன்மை, ஒருவரின் உள்ளான ஆவியின் முடிவற்ற குத்துதலின் ஓய்வற்ற தன்மை ஆகியவை வாழ்வில் நரகத்தைப் படைக்கின்றன'' என்று எழுதினர்.*[29] *இவ்வகையான வாதையைப் பற்றி நினைக்கும்போது, யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுத்தலில் தான் செய்திருந்ததை உணர்ந்தறிந்த வேளையில் அவனுக்கு ஏற்பட்ட வேதனை என் நினைவுக்கு வருகிறது. மனச்சாட்சியின் வாதையினுடைய துன்பகரமான விளைவுகளை நீங்கள் காணவேண்டும் என்றால், கயிற்றிலிருந்து தொங்கிக் கொண்டு, நண்பகல் சூரியனில் வீங்கிப்பெருத்த யூதாஸின் (இறந்த) உடலைக் கண்ணோக்குங்கள் (மத்தேயு 27:5; அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:16-18ஐக் காணவும்).*

சிலர் தங்கள் மனச்சாட்சியைக் கடினப்படுத்திக் கொள்கின்றனர் என்பது உண்மையே, ஆனால் அவர்கள் அப்போது, தேவனிடத்தில் இருந்து பிரிந்து வாழுதலின் விளைவுகளை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. உலகம் கொடுக்க முடிகிற யாவற்றையும் தேடி, தேவனைப் புறக்கணித்தல் என்பதற்கு, சாலொமோன் ஒரு உதாரணமாக இருக்கின்றார். சாலொமோன், கற்றறியக் கூடிய ஒவ்வொன்றையும் அறிவதற்கு "[தமது] மனதைப் பிரயோகம்" பண்ணியபோது (பிரசங்கி 1:13), அவர் "அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு, அறிவு பெருத்தவன் நோவுபெருத்தவன்" என்பதைக் கண்டறிந்தார் (பிரசங்கி 1:18) என்று பிரசங்கியின் புத்தகம் காண்பிக்கிறது. அவர் தம்மைச் சிற்றின்பத்திற்கு ஒப்புக்கொடுத்தபோது, கடைசியில் அவர் "அது என்ன செய்யும்?" என்றார் (2:1, 2). அவரது மாபெரும் சாதனைகளுக்குப் பின்பு அவர், "இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது, சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை" என்று எழுதினார் (பிரசங்கி 2:11). அவர் மாபெரும் செல்வத்தைச் சேர்த்துக் குவித்தபோது, "பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை, செல்வப்பிரியன் செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை, இதுவும் மாயையே" என்று முடிவு செய்தார் (பிரசங்கி 5:10).

நூற்றுக்கணக்கான தற்கால உதாரணங்கள் சிந்தைக்கு வருகின்றன: செல்வங்களைக் குவிப்பதில் தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவிடுபவர்கள், அதற்குப் பின்பு அந்தச் செல்வங்கள் தங்கள் ஆத்துமாக்களைத் திருப்தி செய்ய இயலாது என்பதைக் கண்டறிகின்றனர் ... உலகத்தால் வெற்றிபெற்றவர்கள் என்று எண்ணப்படுபவர்கள் பரிதபிக்கப்படத்தக்க மற்றும் மாயையான நிலையில் முடிகின்றனர் ... மனிதர்கள் மற்றும் தேவன் ஆகியோரின் சட்டங்களுக்கு மேலானவர்களாகத் தங்களையே நினைத்துக் கொண்டவர்கள், "துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானது" (நீதிமொழிகள் 13:15ஆ) என்ற கூற்றின் கடுமையான உண்மை நிலையை அறிகின்றனர்.

பாவத்தின் உள்ளாகக் கட்டமைக்கப்பட்டுள்ள விளைவுகளில், நாம் நேசிப்பவர்களிடத்தில் இருந்து விலகுதல், மனம் மற்றும் உடல் ஆகியவற்றின் சீரழிவு. வாழ்வானது கட்டுப்பாட்டிற்கு வெளியே உள்ளது என்று உணருதலின் சலிப்புநிலை, "அது அவ்வளவுதான்" என்ற வெறுமையான உணர்வு, இருதயத்தை நிறைக்கும் கசப்புத்தன்மை, நியாயத்தீர்ப்பை நிழலிடும் சந்தேகம், பேரழிவு தாக்கும்போது ஆத்துமாவைப் பட்சிக்கிற பயஉணர்வு, மற்றும் வீணாக்கப்பட்ட வாழ்வின் துன்ப நிலை ஆகியவை உள்ளடங்குகின்றன. இந்த பட்டியலை நீங்கள் தொடர்ந்து நிரப்ப முடியும்.

இவைகள் பாவம் நிறைந்த வாழ்வை வாழுதலின் இயல்பான விளைவுகளாய் உள்ளன. "இந்த வாழ்வில் நாம் நமது பாவங்களினால் தண்டிக்கப்படுவதைக் காட்டிலும் அதிகமாக, நமது பாவங்களுக்காகத் தண்டிக்கப்படுவதில்லை."[30] லியோன் மோரிஸ் அவர்கள், "நிகழ்ச்சிகள் தங்கள் ஓட்டத்தை மேற்கொள்வதை அனுமதித்தல் என்பதுதான் தேவன் செய்ய வேண்டிய எல்லாமுமாக உள்ளது, பாவிகள் தவறாமல்

*தண்டிக்கப்படுவர்"*[31] *என்று கவனித்துள்ளார். புரூஸ் மெட்செஜர் அவர்கள் பின்வருமாறு விளக்கினார்:*

> *பஞ்சத்தையும் மரணத்தையும் தேவன் அங்கீகரிப்பதில்லை ... , ஆனால் மக்கள் தேவனுடைய சட்டத்தை எதிர்த்து நிற்பதில் நிலைத்திருந்தால் அவை (பஞ்சம் மற்றும் மரணம்) தொடர வேண்டியவைகளாக உள்ளன ... . குன்றின்மீது அடியெடுத்து வைத்தல் போன்ற இயற்கை விதிகளைப் புறக்கணியுங்கள், அப்போது பேரழிவு தொடருகிறது. ஒழுக்கரீதியான விதிகளைப் புறக்கணியுங்கள், அப்போதும் பேரழிவு நிச்சயமாகவே பின்தொடருகிறது. விவரிக்கப்பட்ட ஐயோக்கள் ... தேவனுடைய கட்டளையைத் தீவிரமாக எடுத்துக்கொள்ளாததின் விளைவாக உள்ளன ... . தேவன் ஐயோக்களை விரும்புவதில்லை, ஆனால் நாம் சுயாதீனமுள்ள முகவர்களாக இருக்கும் வரையிலும் அவற்றைத் தேவன் அனுமதிக்கின்றார்.*[32]

***அழிவு விவரிக்கப்பட்டது (வசனங்கள் 7-10)***

*இந்த இடம் வரையிலும் யோவான், இப்படிப்பட்ட வாதையைத் தரக்கூடிய உயிரினங்களைப் பற்றிய விவரிப்பைக் கொடுத்திராதிருந்தார். அவர் அதை, வசனங்கள் 7 முதல் 10 வரையுள்ள பகுதியில் நிவிர்த்தி செய்தார். ("தரிசனத்தில் வந்த ஒரு வெட்டுக்கிளி" என்ற விளக்க படத்தைக் காணவும்.) மீண்டும் ஒருமுறை நாம், திகிலூட்டும் இந்த உருவகங்களின் முற்றான செயல்வலிவைத் தவறவிடுமளவுக்கு விபரங்களின்மீது அதிகமாக வலியுறுத்தம் செலுத்தாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். சார்லஸ் ரைரீ அவர்கள், "இந்த அதிகாரத்தில், 'போல' மற்றும் 'ஒப்பாயிருந்தது' என்ற வார்த்தைகள், வேதாகமத்தின் வேறு எந்த அதிகாரத்தைக் காட்டிலும் அதிகமாக உள்ளன, இது யோவான் தமது தரிசனத்தில் கண்ட காட்சியை விவரிப்பதற்கு எவ்வளவு சிரமப்பட்டார் என்பதைக் காண்பிக்கிறது" என்று விளக்கம் அளித்தார்.*[33]

*யோவான், "அந்த வெட்டுக்கிளிகளின் உருவம் ... குதிரைகளுக்கு ஒப்பாயிருந்தது" (வசனம் 7அ) என்று கூறியதன் மூலம் தமது விவரிப்பைத் தொடங்கினார்.*[34] *நீங்கள் மிக விரிவான கற்பனைத்திறன் கொண்டிருந்தால், இயற்கையான ஒரு வெட்டுக்கிளிக்கும் ஒரு குதிரைக்கும் இடையில் சில ஒத்த தன்மைகளைக் காண முடியும். ஜெர்மன் மொழியில், வெட்டுக்கிளி heupferd அல்லது* "hay-horse" [*"வைக்கோல்-குதிரை"*] *என்று அழைக்கப் படுகிறது. இத்தாலிய மொழியில், இது, "சிறிய குதிரை" என்று அர்த்தம் கொண்ட cavalletta என்று அழைக்கப்படுகிறது. "அந்த வெட்டுக்கிளிகளின் உருவம் யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணப்பட்ட குதிரைகளுக்கு ஒப்பாயிருந்தது" என்று யோவான் திட்டவட்டமாகக் கூறினார் (வசனங்கள் 7அ, ஆ). இது வெட்டுக்கிளிகளின் மார்புக்கவசத்தை (வசனம் 9) குறிப்பிடக்கூடும் அல்லது அவைகள் சண்டையிட ஆவலாய் இருந்தன என்று மாத்திரம் அர்த்தப்படக்கூடும்.*

*பின்பு யோவான், அவைகளுடைய "தலைகளின்மேல் பொன்மயமான கிரீடம்போன்றவைகளிருந்தன" (வசனம் 7இ) என்ற விபரத்தைக் கூடுதலாக*

கொடுத்தார். "வெற்றி" என்பதற்கான கிரேக்க வார்த்தையான stephanos என்பது இவ்விடத்தில் "கிரீடம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த வெட்டுக்கிளிகள் வாதித்தல் என்ற தங்களுடைய ஊழியத்தை நிறைவேற்றுவதில் வெற்றிநிறைந்தவையாய் இருக்கும் (ஒரு துயர் நிறைந்த சிந்தனை). எவ்வகையான வெற்றி மகிழ்வுடன் அனுபவிக்கப்பட்டாலும், அது தற்காலிகமானதாகவே இருக்கும்; இவைகள் உண்மையில் வெற்றிக் கிரீடங்களாக இருக்கவில்லை, ஆனால் "பொன்மயமான கிரீடம் போன்றவைகளாகவே இருந்தன."

அடுத்த பண்பு மிகவும் குறிப்பிடத் தக்கதாக இருக்கலாம்: "அவைகளின் முகங்கள் மனுஷருடைய முகங்கள் போலிருந்தன" (வசனம் 7ஈ). அதிகாரம் 4ஐ படித்தபோது, நான்கு ஜீவன்களில் மூன்றாவது "மனுஷமுகம் போன்ற முகமுள்ளதாக" (4:7) இருந்தது என்று நாம் கவனித்திருந்தோம், மற்றும் இது புத்திக்கூர்மையையோ அல்லது சாதுர்யத்தையோ குறிக்கலாம் என்று முடிவு செய்திருந்தோம். ஒருவேளை அதைப்போன்ற கருத்து இவ்விடத்திலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கலாம். "முன்னேறி வந்த சேனையின் முகத்தை யோவான் நேரடியாகப் பார்த்தபோது, விலங்கு உலகத்தின் மந்தமான செயல்பாட்டையல்ல, ஆனால் பேய்த்தனமான (மனிதத்துவ) ஜீவிகளின் உயர்வான புத்திக்கூர்மை, தந்திரம் மற்றும் கொடூரம் ஆகியவற்றையே கண்டார்."[35] எவ்வகையிலும், "மனிதனும் மிருகமும், இயற்கையற்ற மற்றும் பேய்த்தனமுடைய ஒரு உருவகத்தில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன" என்பது குறிப்பிடத்தக்கதாகக் காணப்படுகிறது.[36] கேயர்டு அவர்கள், "பொல்லாங்கு என்பது பாவம் நிறைந்த பல வடிவங்களை மேற்கொள்ளலாம் ... ; ஆனால் கடைசி ஆய்வில் அது ஒரு மனித முகம் கொண்டுள்ளது, ..." என்று எழுதினார்.[37]

இந்த உயிரினங்களின் "கூந்தல் ஸ்திரீகளுடைய கூந்தல்போலிருந்தது" (வசனம் 8அ). ஒருவேளை இந்தக் கூந்தல், தலையில் இருந்திருக்கலாம், ஒருவேளை அது முழு உடலையும் மூடியிருக்கலாம். இந்த விபரம் இன்னொரு அசாதாரணத் தன்மையை மாத்திரம் கூட்டுகிறது.[38]

"அவைகளின் பற்கள் சிங்கங்களின் பற்கள்போலிருந்தன" (வசனம் 8ஆ). இவைகளின் விஷயத்தில், பற்கள் (இரையைக்) கிழிப்பதற்குப் பயன்படுத்தப்படவில்லை;[39] மாறாக, இந்த உருவகமானது, இந்த இராட்சஸ உயிரினத்தின் இரத்ததாகம் கொண்ட இயல்பை வலியுறுத்துகிறது.

"இருப்புக் கவசங்களைப்போல மார்க்கவசங்கள் அவைகளுக்கு இருந்தன" (வசனம் 9அ). வெட்டுக்கிளிகளின் வெற்றி கொள்ளப்பட இயலாதவைகள் போலத் தோன்றின. இது வெட்டுக்கிளியின் உடலை மூடியிருந்த இயல்பான மேல்செதில்களைக் குறிப்பிடலாம், அல்லது ஒருவேளை இந்த வெட்டுக்கிளிகள் யுத்தக் குதிரைகளின் விசேஷித்த ஆயுதத்தைக் கொண்டிருக்கலாம். பிரையன் அவர்கள் தாம் வரைந்த படத்தில் இந்த மார்க்கவசங்களை எவ்விடத்தில் வரைந்துள்ளார் என்று காண்பதற்கு அவர் வரைந்த படத்தைச் சற்று நேரம் உற்றுநோக்குங்கள்.

"அவைகளுடைய சிறகுகளின் இரைச்சல் யுத்தத்திற்கு ஓடுகிற அநேக

*குதிரைகள் பூண்ட இரதங்களின் இரைச்சலுக்கு ஒப்பாயிருந்தன" (வசனம் 9ஆ). வெட்டுக்கிளிகளின் வாதையை அனுபவித்துள்ளவர்கள், அவைகள் ஏற்படுத்தும் இரைச்சல், ஒரு மாபெரும் நீர்வீழ்ச்சியின் இரைச்சலுக்கு, பிரைய்ரீ புல்வெளியில் ஏற்படும் தீ விபத்தின்போது உண்டாகும் இரைச்சலுக்கு, அல்லது மரங்களின் மீது கனத்த மழை விழும்போது உண்டாகும் இரைச்சலுக்கு ஒப்பிட்டுள்ளனர். யோவானால் பயன்படுத்தப்பட்ட விவரிப்பான வார்த்தைகள், வெட்டுக்கிளிகளின் சாவுக்கேதுவான நோக்கத்தை எடுத்துரைக்கின்றன.*

## ***நடத்துநர் (9:11)***

*யோவான், வெட்டுக்கிளிகளைப் பற்றி இன்னும் ஒரு விளக்கத்தைக் கொண்டிருந்தார் - இதன் மறை கருத்துக்களில் உள்ள தகவல் உறையச் செய்வதாக உள்ளது: "அவைகளுக்கு ஒரு ராஜன் உண்டு" (வசனம் 11அ). இயல்பான "வெட்டுக்கிளிகளுக்கு ராஜன் கிடையாது" (நீதிமொழிகள் 30:27), ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் 9ன் வெட்டுக்கிளிகள் ஒரு அரசனைக் கொண்டிருந்தன. இவ்விதமாக, அவற்றின் தாக்குதல்கள் ஒருங்கிணைக்கப்பட்டு இயக்கப்பட முடிந்திருந்தன. இந்த காரணத்தினால், அவைகளின் வாதிக்கும் செயலானது விசேஷித்த வகையில் செயல்விளைவுள்ளதாகவும் பேரழிவு ஏற்படுத்துவதாகவும் இருக்கும்.*

*அவர்களின் அரசன் "பாதாளத்தின் தூதன்" என்பவனாயிருந்தான் (வசனம் 11ஆ). முன்பே குறிப்பிட்டபடி, இது ஒருவேளை, வானத்தில் இருந்து விழுந்த நட்சத்திரமாயிருக்கலாம்; ஒருவேளை இது இன்னொரு ஜீவியாக இருக்கலாம். இந்த தனிநபரின் பெயரானது, குறிப்பிடத்தக்கதாக உள்ளது. "எபிரெயு பாஷையிலே அபெத்தோன் என்றும், கிரேக்கு பாஷையிலே அப்பொல்லியோன் என்றும் அவனுக்குப் பெயர்" (வசனம் 11இ). "கண்டிப்பான முறையில், 'அபெத்தோன்' என்பது 'அழிவு' என்றும், 'அப்பொல்லியோன்' என்பது 'அழிப்பவன்' என்றும் அர்த்தம் கொண்டுள்ளன என்றாலும் இவ்விரு வார்த்தைகளும் ஏறக்குறைய ஒரே அர்த்தம் கொண்டுள்ளன."[40]*

*இது சாத்தான் என்று பெரும்பான்மையானவர்கள் யூகிக்கின்றனர், அவ்வாறே இருக்கலாம். இயேசு, "திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறான்" என்று கூறியபோது (யோவான் 10:10அ) அவர் சாத்தானை (அல்லது அவனது உடன் வேலையாட்களில் ஒருவனை) குறிப்பிட்டார். இருப்பினும், வெளிப்படுத்தின விசேஷம் 2 மற்றும் 3ல் யோவான் சாத்தானை அர்த்தப்படுத்தியபோது, அவர் அதை மிகத் தெளிவாகக் கூறினார் (2:9, 10, 13, 24; 3:9). பிற்பாடு இதே புத்தகத்தில், இந்த அப்போஸ்தலர் சாத்தானுக்கு ஒரு அடையாளத்தை பயன்படுத்தியபோது, அந்த அடையாளத்தை இவர் நமக்காக விளக்கப் படுத்தினார் (12:9, 12; 20:2, 7, 10).*

*உண்மையில், அபெத்தோன்/அப்பொல்லியோன் என்பவனுடைய அடையாளத்துவம் பற்றிப் பல சாத்தியக்கூறுகள் உள்ளன.*

எடுத்துக்காட்டாக, "அபெத்தோன்" என்பது "பழைய ஏற்பாட்டில், Sheol அல்லது *Hades* (பாதாளம்) என்பதற்கு உலகளாவிய கல்லறை, மரணத்தின் தேசம், அந்தகாரம், அமைதி மற்றும் மறக்கப்பட்ட இடம், வாழ்வையும் நம்பிக்கையையும் அழிப்பவன் என்ற ஒருபொருட் பலசொற்களாக ஆறு முறைகள் வருகிறது."[41] ஒருவேளை, வசனம்11ல் "அபெத்தோன்" என்பது நான்காவது குதிரை வீரனையும் அவனது உடனாளிகளான மரணம் மற்றும் பாதாளம் ஆகியவற்றையும் குறிப்பிடுகிற இன்னொரு வழிமுறையாக மாத்திரம் இருக்கலாம் (6:8).

அபெத்தோன் என்பது இன்னொரு தூதன் என்பதாக மாத்திரம் இருக்கக்கூடும். இவன் நல்லவனாகவோ அல்லது தீயவனாகவோ இருக்கலாம், ஊழியம் செய்யும்படி தேவனால் நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கலாம். ஒவ்வொரு தரிசனத்திலும் நடப்பது போலவே, ஆய்வின்கீழுள்ள வசனப்பகுதியும், தேவன் கட்டுப்பாடு செலுத்துகின்றார் என்பதை நிலையாக வலியுறுத்துகிறது.

"அப்பொல்லியோன்" மற்றும் "அப்பொல்லோ" என்ற பெயர்களுக்கு இடையில் உள்ள ஒற்றுமைகளைச் சில எழுத்தாளர்கள் சுட்டிக்காண்பித்து, கிரேக்கக் கடவுளான அப்பொல்லோவின் அவதாரம் என்று தன்னை உரிமைகோரிக்கொண்ட டொமீஷியனின் கபடநோக்கத்தை யோவான் எடுத்துரைத்தார் என்று நம்புகின்றனர். "யோவான் இதைக் கண்ணோக்கில் கொண்டிருந்தால், ஐந்தாம் எக்காளம் பற்றிய அவரது கடைசி வார்த்தையானது முரண்பாட்டின் பிரதானத் தாக்குதலாய் இருக்கும்: அழிக்கும் தன்மை கொண்ட நரகத்தின் சேனையானது ரோமாபுரிப் பேரரசைத் தனது அரசனாகக் கொண்டிருந்தது!"[42]

வெட்டுக்கிளிகளுக்கும் ''அழிவு'' என்று பெயரிடப்பட்ட ஒரு தலைவனுக்கும் இடையில் உள்ள மிகத்தெளிவான தொடர்பு, பொதுவாகக் கவனிக்காது விடப்படுகிறது: "பழங்கால எபிரெயர்கள் வெட்டுக்கிளிகளை மாறுபட்ட பல பெயர்களின்கீழ் குறிப்பிட்டனர்,[43] இந்தப் பெயர்கள் ஒவ்வொன்றும் *அழிவு* என்பதைக் குறிப்பிட்டது."[44] வெட்டுக்கிளிகளின் அரசனை "அழிவு" என்று அழைத்தலானது, *அழிவு* என்பதை நரகத்திற்குரிய அந்த உயிரினங்களின் நிறைவான நோக்கமாய் இருந்தது என்று வலியுறுத்துவதற்குப் பரிசுத்த ஆவியானவரின் வழிமுறையாக மாத்திரம் இருந்திருக்கலாம்.

''அபெத்தோன்/அப்பொல்லியோன்'' என்பது யாராக அல்லது என்னவாக இருக்கிறது என்பது சார்பு நிலையில் முக்கியமற்றதாக உள்ளது. மனந்திரும்பியிராத நிலையில் உள்ள பாவம் என்பது *அழிவை* விளைவிக்கிறது என்பதே புரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான விஷயமாக உள்ளது: இது, உடல், மனம், மற்றும் ஆத்துமா ஆகியவற்றில் அழிவை விளைவிக்கிறது. அது தரிசனத்தைத் தொகுத்துரைக்கிறது. அது பாவியின்மீது பாவத்தின் விளைவு பற்றிய தேவனுடைய வசனமாக உள்ளது.

# முடிவுரை

பாவம் என்பது ஏறக்குறைய தீங்கற்றது மற்றும் அது உண்மையில் வாழ்வின் தரத்தை மேம்படுத்தக்கூடும் என்று உலகம் கூறுகிறது. உண்மையில் தேவன், "பாவம் என்ன செய்கிறது என்பதை நீங்கள் அறிய வேண்டும் என்றால், கண்ணோக்கி கற்றுக்கொள்ளுங்கள்'' என்று கூறுகின்றார் - பின்பு அவர், பாதாளக்குழியில் இருந்து கொள்ளை கொண்டுபோக வரும் உயிரினங்களின் பயங்கரச் சித்தரிப்பை முன்வைக்கின்றார். தேவனுடைய செய்திக்கு ஒரு உணர்வைப் பெறுவதற்கு, சற்றுநேரம் நீங்கள் உங்களை இந்தத் தரிசனத்தின் உள்ளாக வைத்துப் பாருங்கள். தேவனுடைய ஆணைகளைப் புறக்கணித்துள்ள ஒரு ஆணாக அல்லது பெண்ணாக உங்களைக் கற்பனை செய்து பாருங்கள்:

நீங்கள் ஒரு பசும் புல்வெளியினூடே நடந்து கொண்டிருக்கின்றீர்கள்; ஆகாயம் நீலவண்ணத்தைப் போர்த்துக் கொண்டுள்ளது, சூரியன் உங்கள் பின்புறத்தை வெதுவெதுப்பாக்குகிறது. எச்சரிக்கை எதுவுமின்றி, உங்கள் காலடியின்கீழ் ஒரு பெரிய குழியானது வாய்திறக்கிறது, அழுக்கான நீல-கறுப்பு நிறப் புகையானது திரண்டு முன்னோக்கி வருகிறது, அது சூரியனை மறைத்து உங்கள் உலகத்தை இருளாக்குகிறது. நீங்கள், உங்கள் செவிப்பறைகள் வெடித்துவிடுமோ என்று நினைக்கும் அளவுக்கு ஒலிச்செறுவு அதிகப்படும் பறப்பொலியொன்றைக் கேட்கின்றீர்கள். திடீரென்று உங்கள் இருளான மனப்பிரம்மையில் இருந்து வந்த உயிரினங்களால் நீங்கள் சூழப்படுகின்றீர்கள், அந்தப் பேய்த்தனமான உயிரினங்கள் காற்றில் உரத்து ஓசையிடுகின்றன.

அவைகள் பெரிய அளவிலான வெட்டுக்கிளிகளைப் போன்றுள்ளன, ஆனால் அவைகள் பூமியில் இதுவரையிலும் காணப்பட்ட எந்த வெட்டுக்கிளிகளைப் போன்றதாகவும் இருக்கவில்லை. அவைகள் தேள்களைப்போல் ஆயுதம் அணிவிக்கப்பட்டுள்ளன, குதிரைகளைப்போல் உருவம் கொண்டுள்ளன, மற்றும் அரசர்களைப்போல் கிரீடம் சூட்டப் பட்டுள்ளன. அவைகள் மனிதர்களின் முகங்களையும், பெண்களின் கூந்தலையும், சிங்கங்களின் பற்களையும் கொண்டுள்ளன. அவைகள் மார்புகவசம் அணிந்தவைகளாகவும், சிறகுகள் உடையவைகளாயும் உள்ளன, அவைகள் செவிடாக்கும் இரைச்சலுடன் செல்லுகின்றன.[45]

அவைகள் அப்பகுதியில் உள்ள கரும்பசுமையான தாவரங்களைப் புறக்கணிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க உண்மையாக உள்ளது; அவைகள் உங்களை நோக்கி நெருங்கி வருகின்றன. மனிதன் போன்றிருந்த அவற்றின் முகங்களில் பரிசுத்தமற்ற கடும்பார்வையின் வெளிப்பாடு உள்ளது. உங்கள் புருவங்களில் இருந்து வியர்வைத் துளிகள் வெளி யேறுகின்றன. உங்கள் இருதயம் உங்கள் மார்பில் இருந்து வெளியே குதித்து விடப்போவதுபோல் நீங்கள் உணருகின்றீர்கள். நீங்கள் இப்பக்கமும் அப்பக்கமுமாகத் திரும்புகின்றீர்கள், ஆனால் நீங்கள் சூழப்பட்டு இருக்கின்றீர்கள். தப்ப வழி எதுவும் இல்லை.

அந்த உயிரினங்களில் ஒன்று முன்னோக்கிப் பாய்ந்து வந்து தனது

*விஷமுனை கொண்ட கொடுக்கினுல் உங்களைக் குத்துகிறது. நீங்கள் பெருந்துன்பத்தினால் நிறைக்கப்படுகின்றீர்கள். உங்கள் உடலின் ஒவ்வொரு பகுதிக்கும் உங்கள் ரத்தக்குழாய்களின் மூலமாக விஷம் கொண்டு போகப்படுவதை நீங்கள் உணர முடிகிறது. பின்பு இன்னொரு வெட்டுக்கிளி வந்து தாக்குகிறது, பின்பு இன்னும் ஒன்று வந்து தாக்குகிறது. நீங்கள் உங்கள் முழங்கால்களில் இறங்கி விழுகின்றீர்கள், விரைவிலேயே அவைகள் உங்களைச் சூழ்கின்றன, அவைகள் உங்கள் தோள்பட்டைகளிலும், உங்கள் கைகளிலும், உங்கள் கால்களிலும், உங்கள் பாதங்களிலும், உங்கள் உடல்பகுதியிலும், உங்கள் கழுத்திலும், உங்கள் தலையிலும், உங்கள் முகத்திலும் தங்கள் கொடுக்குகளைப் பாய்ச்சுகின்றன. புரண்டு நெளிந்து, வதைக்கும் உடல்களின்கீழ் நீங்கள் மயங்கிச் சாய்கின்றீர்கள்.*

*நீங்கள் தரையின்மீது நெளிந்து கொண்டிருக்கையில், உங்கள் உடலானது தகிக்கும் வேதனையினுல் பட்சிக்கப்படுகிறது, உங்கள் சிந்தனையினூடே பாதிநினைவில் உள்ள வார்த்தைகள் விட்டு விட்டு ஒளிர்கின்றன: "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23அ).*

*பாவிக்குப் பாவம் என்ன செய்கிறது என்பதை நாம் அறியவேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்!*

*நாம் இதை அறியவேண்டும் என்று அவர் விரும்புவது ஏன்? அவர் நம்மை வெறுமனே பயமுறுத்த விரும்பவில்லை, ஆனுல் நாம் நமது பாவங்களில் இருந்து திரும்பி, அவரிடமாய்த் திரும்பவேண்டும் என்று அவர் விரும்புகின்றார். வெட்டுக்கிளிகள் பற்றிய யோவேலின் தரிசனத்தைச் தொடர்ந்து மனந்திரும்புதலுக்கான ஒரு அழைப்பு விடுக்கப்பட்டது:*

> *ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். ... உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள், அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர், அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார் (யோவேல் 2:12, 13).*

*யோவானின் நாட்களில் தேவனால் எச்சரிக்கப்பட்டவர்கள் கவனித்துக் கேட்கவில்லை (வெளிப்படுத்தின விசேஷம் 9:20) ஆனுல் நீங்கள் கவனித்துக் கேட்க வேண்டும் என்பற்காக நான் ஜெபிக்கின்றேன். நீங்கள் ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தால் அல்லது உங்கள் ஆதி அன்பை மறுபடியும் கட்டியெழுப்ப வேண்டியிருந்தால், அதை இன்றே செய்யுங்கள்![46]*

---

*குறிப்புகள்*

[1]Karl Menninger, *Whatever Happened to Sin?* (New York: Hawthorn Books, 1973).
[2]Jimmy Allen, *"What Is Hell Like?" and Other Sermons* (Dallas: Christian Publishing Co.,

1965), 22-40. [3]Rubel Shelly, *The Lamb and His Enemies: Understanding the Book of Revelation* (Nashville: 20th Century Christian Foundation, 1983), 60. [4]Robert Mounce, *The Book of Revelation*, The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 195. [5]Jim McGuiggan, *The Book of Revelation*, Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976), 94. [6]*கடந்த காலத்தின் நாட்களில், இது தொடர் வரலாற்று அணுகுமுறையைப் பின்பற்றுபவர்களுக்குப் பிரியமான முடிவாக இருந்தது.* [7]*இது ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் சிலரின் தற்காலத்திய விளக்கமாக உள்ளது.* [8]Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 233. [9]Frank Pack, *Revelation*, Part 1, The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 77-78. [10]M. Robert Mulholland, Jr., *Revelation: Holy Living in an Unholy World*, Francis Asbury Press Commentary, gen. ed M. Robert Mulholland, Jr. (Grand Rapids, Mich.: Francis Asbury Press, 1990), 196.

[11]Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 158. [12]Owen L. Crouch, *Expository Preaching and Teaching: Revelation* (Joplin, Mo.: College Press Publishing Co., 1985), 167. [13]G. B. Caird, *A Commentary on the Revelation of St. John the Divine* (London: Adam & Charles Black, 1966), 118, 120. [14]*வெளிப்படுத்தின விசேஷம் 9ல் உள்ள நட்சத்திரமும் தூதனும் 20:1ல் பாதாளத்தின் திறவுகோலுடன் இருந்த தூதனுக்கும் இடையில் ஏதேனும் தொடர்பு உள்ளதா? என்பது கேட்கப்படக்கூடிய இன்னொரு கேள்வியாக உள்ளது.* [15]*வெளிப்படுத்தின விசேஷம் 12:9. பிசாசின் தூதர்களைப் பற்றிப் பேசுகிறது. 2 பேதுரு 2:4, பாவம் செய்த தூதர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. ஏவுதல் பெற்றிராத பாரம்பரியங்கள் 2 பேதுரு 2:4ன் தூதர்கள் "தேவனுக்கு எதிராகக் கலகம் செய்யும்படி சாத்தானால் வழிநடத்தப்பட்டனர்" என்று கூறுகிறது.* [16]KJV *வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷம் 9:1, 2, 11ல்* "bottomless pit" *என்றுள்ளது. ஒருவேளை இச்சொற்றொடர் நன்கு அறியப்பட்டதாக இருப்பதாலும், இது ஒரு சித்தரிப்புச் சொற்றொடராக இருப்பதாலும்* NASB *வேதாகமம், வசனங்கள் 1, 2ல் இந்தச் சொற்றொடரைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. இருப்பினும் வசனம் 11ல்,* NASB *வேதாகமம்* "the abyss" *என்ற சொற்றொடரைக் கொண்டுள்ளது.* [17]*Tehom என்ற எபிரெய வார்த்தையை செப்துவஜிந்த் வேதாகமம்,* "abyss" *என்று மொழிபெயர்த்துள்ளது. நமது வேதாகமங்களில், பழைய ஏற்பாட்டில்* tehom *என்ற வார்த்தை "ஆழமான" அல்லது "ஆழம்" என்று பொதுவாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [18]KJV *வேதாகமம் லூக்கா 8:31 மற்றும் ரோமர் 10:7 ஆகிய வசனங்களில்* "abyss" *என்ற வார்த்தையை* "the deep" *("ஆழம்") என்று மொழிபெயர்த்துள்ளது.* [19]William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 145. [20]Alfred Plummer, "The Revelation of St. John the Divine," in *The Pulpit Commentary*; vol. 22, Epistles of Peter, John & Jude, *The Revelation*, ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 263.

[21]*பழைய ஏற்பாடு முழுவதிலும், வெட்டுக்கிளிகள், அழிவின் அடையாளமாகவே உள்ளன (உபாகமம் 28:42; 1 இராஜாக்கள் 8:37; சங்கீதம் 78:46ஐக் காணவும்).* [22]Much of this paragraph was adapted from Merrill C. Tenney, *Proclaiming the New Testament: The Book of Revelation* (Grand Rapids, Mich.: Baker Book House,1963), 46. [23]*இந்தக் கட்டளையை உண்மையில் பேசியது யார் என்பது பற்றி வசனப்பகுதி எதுவும் கூறுவதில்லை, ஆனால் இது தேவனிடத்தில் தோன்றியது என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்.* [24]*இத்துடன் கூடுதலாக, தேவனுடைய பொறுமை முடிவதற்கு முன்பு, மனந்திரும்புவதற்கு வரையறைக்குட்பட்ட காலமே மக்களுக்கு*

உள்ளது என்ற மறைமுகக் கருத்துள்ளது என்று சிலர் காணுகின்றனர். [25]வயது முதிர்ந்தவர்கள், மிகவும் இளம் வயதினர் மற்றும் நோயுற்ற இருதயங் கொண்டவர்கள் ஆகியோர் இதன் விதிவிலக்குகளில் உள்ளடங்கக் கூடும். [26]பழைய ஏற்பாட்டில் இதேபோன்ற சொல்விளக்கங்களுக்கு, யோபு 3:21; எரேமியா 8:3 ஆகிய வசனங்களைக் காணவும். [27]இவ்வசனத்தின்மீது அதிகம் நேரடி அர்த்தமான வழக்கு சொல்லை விரும்புகின்றவர்கள் பின்வரும் கருத்தை பற்றி ஆழ்ந்து சிந்திக்கவும்: ஆவிக்குரிய உபத்திரவங்கள் சரீரப்பிரகாரமான மரணத்தினால் விலக்கப்பட/ விடுவிக்கப்பட முடியாது. பாவம் நிறைந்த செல்வந்தன் மரணத்திற்குப் பின்பு “பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து” பார்த்தான் (லூக்கா 16:23). ஒருநபர், கிறிஸ்துவுக்குப் புறம்பே இருந்து மரிக்கின்றபோது, மரணத்திற்குப் பின்பு உண்டாகும் வாதையானது, இவ்வாழ்வில் அவன் அனுபவித்த வாதையைக் காட்டிலும் அதிகமாக, முடிவில்லாத வகையில் மிகமோசமானதாக இருக்கும். [28]பவுலின் கதறுதல், சரியானதைச் செய்ய முயற்சிப்பதில் தவறிய ஒரு நபருடைய கதறுதலைப் போல் இருக்கிறது. அதேவேளையில் இன்றைய நாட்களில் பாவிகளில் பலர் சரியானதைச் செய்வதற்கு முயற்சி செய்வதில்லை. இருந்தபோதிலும், பவுலினுல் விளக்கியுரைக்கப்பட்ட மனச்சாட்சியின் ஏக்கக் குரலானது உலகளாவியதாக உள்ளது. [29]Crouch, 167. [30]Allen, 33.

[31]Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 100. [32]Bruce M. Metzger, *Breaking the Code: Understanding the Book of Revelation* (Nashville: Abingdon Press, 1993), 58. [33]Charles Caldwell Ryrie, *Revelation* (Chicago, Ill.: Moody Press, 1968), 61. [34]வெளிப்படுத்தின விசேஷம் 9ன் வெட்டுக்கிளிகளை யோவேல் 1; 2ன் வெட்டுக்கிளிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். விவரிப்பின் சில சொற்றொடர்கள் ஒன்றுபோல் இருப்பதையும் சிலசொற்றொடர்கள் மாறுபட்டிருப்பதையும் நீங்கள் காண்பீர்கள். இவ்விரண்டுமே குதிரைகளுடன் ஒப்பிடப்பட்டன என்பது ஒற்றுமையாக உள்ளது (யோவேல் 2:4). யோவேலின் தீர்க்கதரிசனத்தில், வெட்டுக்கிளிகள் மேகமாய் இருந்தன (யோவேல் 2:2), வெளிப்படுத்தின விசேஷம் 9ன் வெட்டுக்கிளிகள் புகையில் இருந்து வெளிவந்தன என்பது மாறுபாட்டின் கருத்துகளில் ஒன்றாக உள்ளது. [35]Mounce, 196. [36]Ibid. [37]Caird, 120. [38]வெட்டுக்கிளிகள் பெண்களுக்குள்ளதுபோல் நீண்ட கூந்தலைக் கொண்டிருந்தன என்ற உண்மையில் சிற்றின்ப வெளிப்பாட்டைச் சிலர் காண்கின்றனர், ஆனுல் என்னைப் பொறுத்தமட்டில், அப்படிப்பட்ட உயிரினத்தின் மீதுள்ள நீண்ட, வழிந்தோடும் கூந்தல் என்பது சிற்றின்ப வெளிப்பாடாக இல்லாமல் அகோரமானதாகவே உள்ளது. “பாவத்தைப் போல் அழகற்ற” - நீண்ட, வழிந்தோடும் கூந்தலுடன் உள்ள ஒரு மனிதனைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அந்த விவரிப்பில் எதுவும் என்னைக் கவருவதில்லை! [39]சிங்கத்தின் பற்கள் அல்ல, ஆனால் தேளின் கொடுக்கு என்பதே அந்த உயிரினத்தின் ஆயுதமாயிருந்தது. [40]T. F. Glasson, *The Revelation of John*, The Cambridge Bible Commentary on the New English Bible Series (Cambridge: Cambridge University Press. 1965), 60.

[41]Caird, 120. [42]G. R. Beasley-Murray, *The Book of Revelation*, The New Century Bible Commentary Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1974), 162-63. அப்பொல்லோவின் மார்க்கப்பிரிவு, வெட்டுக்கிளி மற்றும் பிற பூச்சியினங்களின் அடையாளத்தைப் பயன்படுத்துகிறது. [43]உதாரணமாக, யோவேல் 1:4ஐக் காணவும். [44]*The World Book Encyclopedia*, 1962 ed., s.v. “Grasshoppers,” by Carl D. Duncan. [45]This paragraph was adapted from Michael Wilcock, I *Saw Heaven Opened: The Message of Revelation*, The Bible Speaks Today Series (Downers Grove, Ill.: Intervarsity Press, 1975), 97.

[46]இது ஒரு பிரசங்கமாக பயன்படுத்தப்பட்டால், ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதில் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:38), அல்லது மீளக் கட்டுவிக்கப்படுதலின் (கலாத்தியர் 6:1; யாக்கோபு 5:16) முக்கியத்துவத்தை விளக்கியுரைக்கவும்.

---


## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. பாவம் என்றால் என்ன? மதவட்டாரங்களுக்கு வெளியில், "பாவம்" என்ற வார்த்தை இன்றைய நாட்களில் அதிகமாகப பயன்படுத்தப் படுகிறதா? விஷயம் அவ்வாறு உள்ளது ஏன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
2. பாவம் நம்மை, "புறம்பாக, உள்ளாக மற்றும் நித்தியகாலத்திற்கும்" புண்படுத்துவது எவ்வாறு?
3. யோவேல் 2ன் வெட்டுக்கிளிகளையும் வெளிப்படுத்தின விசேஷம் 9ன் வெட்டுக்கிளிகளையும் ஒப்பிடவும். அவைகள் எவ்வகையில் ஒன்றுபோல் உள்ளன? அவைகள் எவ்வகையில் மாறுபட்டுள்ளன?
4. வெட்டுக்கிளிகள் என்பவை கோப்ரா ஹெலிகாப்டர்களாய் உள்ளன என்ற கருத்தை, இந்தப் பாடத்தின் எழுத்தாளர் ஏன் புறக்கணிக்கின்றார்?
5. இந்த பாடமானது, ''பாவத்தின் வாதிக்கும் இயல்பு'' பற்றிப் பேசுகிறது, மற்றும் இது, "பாவம் குறித்து உள்கட்டமைக்கப்பட்ட சுய அழிவுதன்மை ஒன்றுள்ளது" என்று கூறுகிறது. இதை நீங்கள் ஒப்புக்கொள்கின்றீர்களா அல்லது கருத்து வேறுபடுகின்றீர்களா?
6. வானத்தில் இருந்து விழுந்த நட்சத்திரம் என்பது யாரை அல்லது எதைக் குறிக்கிறது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?
7. "பாதாளக்குழி" என்றால் என்ன? அது அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலாக (வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், நரகமாக) உள்ளதா?
8. புகை (மற்றும் அது உண்டாக்கிய இருள்) எதைக்குறிக்கிறது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?
9. ''வெட்டுக்கிளிகள் வருகின்றன?'' என்ற எச்சரிக்கையானது பழங்கால உலகில் இருந்தவர்களுக்கு மிகவும் பயங்கரமாய் இருந்தது ஏன்? வெட்டுக்கிளிகளின் வாதைகள் இன்றைய நாட்களிலும் நடைபெறுகின்றனவா?
10. வெளிப்படுத்தின விசேஷத்தின் வெட்டுக்கிளிகள் சாதாரணமான, இயல்பான மற்றும் நேரடி அர்த்தமான வெட்டுக்கிளிகளாய் இருந்தனவா? உங்கள் பதிலுக்கான காரணம் என்ன?
11. முத்திரையிடப்பட்டவர்கள் வெட்டுக்கிளிகளால் தீங்கிழைக்கப் படாதிருந்தது ஏன்? (முத்திரையிடப்பட்டவர்கள் யார் என்பதை விளக்கப்படுத்த தயாராய் இருக்கவும்.)


12. *“ஐந்து மாதங்கள்” என்ற சொற்றொடர் கொண்டுள்ள சாத்தியக் கூறுள்ள தனிச்சிறப்பு என்ன?*
13. *நீங்கள் எப்போதாவது ஒரு தேளைப் பார்த்திருக்கின்றீர்களா? நீங்கள் எப்போதாவது தேளினால் கொட்டப்பட்டு இருக்கின்றீர்களா? அவ்வாறு கொட்டப்பட்ட எவரையாவது உங்களுக்குத் தெரியுமா? அதைப் பற்றி கூறவும்.*
14. *வாதிக்கப்பட்டவர்கள் மரணத்தைக் காணக்கூடாதிருந்தது என்று வேதவசனம் கூறுவது ஏன் என்பது பற்றி நீங்கள் நினைப்பது என்ன?*
15. *பாவம்நிறைந்த வாழ்வுப் பாணியின் உள்ளாகக் கட்டமைக்கப்பட்டுள்ள சில விளைவுகள் யாவை?*
16. *வெட்டுக்கிளிகள் பற்றிய யோவானின் விவரிப்பை - மற்றும் ஒவ்வொரு விபரத்திற்கும் சாத்தியக்கூறுள்ள முக்கியத்துவத்தை - எடுத்துரைக்கவும்.*
17. *“அபெத்தோன்” மற்றும் “அப்பொல்லியோன்” என்ற பெயர்களின் அர்த்தம் என்ன? இது தனிநபர் மீது பாவத்தின் செயல்விளைவை எவ்வாறு தொகுத்துரைக்கிறது?*
18. *விபரங்கள் படிக்கப்பட்ட பின்பு, தரிசனம் விட்டுச்செல்லுகிற முற்றிலுமான மனப்பதிவு என்பதே முக்கியமான விஷயமாய் உள்ளது. வெட்டுக்கிளிகள் பற்றிய உங்கள் முற்றிலுமான மனப்பதிவு என்ன? நீங்கள் அவைகளால் தாக்கப்படுவதை விரும்புவீர்களா? அப்படிப்பட்ட வாதையை நாம் எவ்வாறு தவிர்க்க முடியும்?*



பாதாளக்குழியில் இருந்து வந்த வெட்டுக்கிளிகள் (9:1-11)



தேளானது கொட்டும்போது உண்டாகும் வேதனையைப்போலிருக்கும் (9:5)



தரிசனத்தில் வந்த ஒரு வெட்டுக்கிளி (9:7-10)